IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No.173/2012 Date: 02.04.2025

PW1- சுமதி

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

அ.வ.எண்.233/1997 வழக்கில் நீதிமன்ற ஆணையாளர் தாவா சொத்தை பார்வையிட்டு நில அளவையர் மூலம் அளந்து அறிக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும். அப்போது என் அம்மாவும் உடனிருந்தார். அந்த அறிக்கையின் விவரம் எனக்கு தெரியாது. ஆனால் அந்த அறிக்கையை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த அறிக்கை எனக்கு விரோதமாக இருக்கும் என்பதால் தான் நான் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் தெரியாது. அதில் வீடுகள் காட்டப்பட்டுள்ளதா என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து சரிபாகமாக பாகம் பிரிக்கப்பட்டு ஆணையர் மூலம் அறிக்கை தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. அதனடிப்படையில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விவரம் என் அம்மா, பெரியம்மா, தாத்தா ஆகிய பாகஸ்தர் அனைவருக்கும் தெரியும் என்றால் சரிதான். அந்த தீர்ப்பின் படி தான் அவர்கள் அனைவரும் சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் அதை மறைத்து அனுபவம் செய்யவில்லை என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அம்மா உயிருடன் இருக்கும் போதே அவர் இறந்துவிட்டதாக வழக்குரையில் திருத்தம் செய்ததால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இ.ம.எண்.222/2004 மனுவானது அந்த வழக்கில் 5ம் பிரதிவாதி ரகு என்பவர் இறந்து போனதற்காக தான் அவரது வாரிசுகள் இளவர்கள் சின்னமணி, சக்தி (எ) சக்திவேல் ஆகியோரை தரப்பினராக சேர்க்க தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் அதில் என் அம்மா இறந்துவிட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்குரையில் என் அம்மா இறந்துவிட்டதாக தவறுதலாக தான் திருத்தம்

செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. அது வேண்டுமென்றே உள்நோக்கத்துடன் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. அதனால் தான் எங்களை வாரிசாக சேர்க்கப்படவில்லை என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதியை அளக்கழிக்க வேண்டும் என்று இத்தாவா பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தாவா செலவுத்தொகையுடன் தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

6 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

அ.வ.எண்.233/1997 வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது 6 ம் பிரதிவாதி பிறக்கவே இல்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கில் இ.ம.எண்.774/2003 மனுவில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்ட விவரம் 6 ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரியல்ல. 6 ம் பிரதிவாதியை பொறுத்து தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-சுமதி

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.